**வாக்குமூலம்**

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**

**வழக்கு எண் : CC.No.1154/2024**

**வழக்கு சாட்சி PW-8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.மைக்கேல்சென்ராஜ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ஜேசு அருள்ராஜ் | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | அகஸ்தியர்பட்டி | வயது | : | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 08th, 2025.

**(எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அறுவை சிகிச்சைப்பிரிவில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். 21.05.2024 அன்று நான் பணியில் இருந்தபோது, தென்காசி அரசு மருத்துவமனையிலிருந்து மேல்சிகிச்சைக்காக வந்த ராஜசேகர் என்பவரை நான் பரிசோதனை செய்தேன். அவருக்கு நெஞ்சு பகுதிக்கும், தலைப்பகுதிக்கும் சீ.டீ.ஸ்கேன் எடுக்கப்பட்டது. இரண்டு ஸ்கேன்களிலும் பிரச்சனைகள் எதுவும் தென்படவில்லை.

23.05.2024 அன்று காது பகுதிக்கு சீ.டீ.ஸ்கேன் எடுக்கப்பட்டது. காது பகுதிக்கு மேலே உள்ள வலது டெம்போரல் போன் எலும்பு முறிவு இருந்தது. Hemosinus and Hemotympanum (இரத்தக்கசிவு) இருந்தது. அவருக்கு தலைக்கு MRI Scan எடுக்கப்பட்டது. அதில் தலையின் இடது பக்க மூளையின் டெம்போரல் பகுதியில் இரத்தக்கசிவும், வீக்கமும் இருந்தது தெரிய வந்தது. அவருக்கு 21.05.2024 அன்று பணியில் இருந்த எலும்பு முறிவு அறுவை சிகிச்சை நிபுணர் சிகிச்சை அளித்துள்ளார். அவருக்கு காது, மூக்கு, தொண்டை அறுவை சிகிச்சை நிபுணர் சிகிச்சை

21.05.2024 மற்றும் 27.05.2024 தேதிகளில் வழங்கியுள்ளார். தலைக்காயத்திற்காக, தலைக்காய அறுவை சிகிச்சை நிபுணர் சிகிச்சை வழங்கியுள்ளார். அவருக்கு அறுவை சிகிச்சை இல்லாமல் மருந்து, மாத்திரைகள் கொடுத்து சிகிச்சை வழங்கப்பட்டது. அவர், 02.06.2024 அன்று சிகிச்சையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கான சிகிச்சை விபரங்கள் **அ.சா.ஆ.3** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

சீ.டீ.ஸ்கேன், எம்.ஆர்.ஐ ஸ்கேன் அதற்கான மருத்துவர் எடுப்பார் என்றால் சரிதான். அந்த அறிக்கைகளை பார்த்தால் காயம்பட்டவருக்கு என்னென்ன காயங்கள் ஏற்பட்டிருந்தது என்று தெரியும் என்றால் சரிதான். நான் காயம்பட்டவருக்கு சிகிச்சை அளிக்கவில்லை என்றால் சரியல்ல. சிறப்பு மருத்துவர்களின் அறிவுரைப்படி காயம்பட்டவருக்கு சிகிச்சை வழங்கினேன். நான் பார்த்த காயங்கள் ஒருவர் வேகமாக வாகனத்தில் வந்து கூர்மையான கற்கள் மீது விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் தரையில் மோதினால் ஏற்பட வாய்ப்புண்டு.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

சாட்சி திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Tmt. A.Nachiyar, Assistant திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.09 19:05:58 +0530